# விலைமனுக்கோரல்

# இலங்கை விமானப்படை

## இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை இரண்டு வருடங்களுக்கு நீடித்தல்

**(02 YEARS TBO & LIFE EXTENSION)**

1. பாதுகாப்பு அமைச்சின் சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்முதல் குழுவின் (DPC) தலைவரினால் ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு விமானப்படையின் செயலாளருக்கு **"இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்தின் சேவை ஆயுள் காலத்தினை இரண்டு வருடங்களுக்கு நீடிப்பதற்காக (02 YEARS TBO & LIFE EXTENSION)"** இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ இல | கொள்முதல் அடையாளம் இலக்கம் | விபரம் | மனு பாதுகாப்பின் பெறுமதி மற்றும் காலம் | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூ.) | மனு முடிவடையும் / திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | AHQ/24/-FR/ANT/1002 | இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்திற்கான (02 Years TBO & Life Extension) of S/No SCM 860 (35-01) கொள்வனவு செய்தல் | 2024.11.12 ரூ.1,000,000.00 | 2024.07.15 | 24,000.00 | 2024.07.16 10.30 மணி |
| 02 | AHQ/24/-FR/ANT/1003 | இலங்கை விமானப்படையில் AN-32B விமானத்திற்கான (02 Years TBO & Life Extension) of S/No SCM 863 (35-01) கொள்வனவு செய்தல் | 2024.11.12 ரூ.1,000,000.00 | 2024.07.15 | 24,000.00 | 2024.07.16 10.30 மணி |

2. மனுக்கோரலானது **சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய (ICB)** இடம்பெறும்.

3. இது சம்பந்தமாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் முழுமையான மனு ஆவணங்களை இலங்கை விமானப்படை இணையத்தளமான **www.airforce.lk** மூலம் அல்லது **2024.06.24** ஆம் திகதி முதல் மனு ஆவணங்கள் வழங்கப்படும் கடைசி நாள் வரை (**0900 மணி தொடக்கம் 1500 மணித்தியாலம்**) வரை கீழே 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்துப்பூர்வமான கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் கட்டணமின்றி இலவசமாக ஆவணத்தொகுப்பை பரீட்சித்துக்கொள்ள முடியும். மனு ஆவணங்களை வழங்கும் இறுதித்திகதிக்கு முன் **LL2 மாடி, இல.594, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள இலங்கை விமானப்படை நிலையத்தின் சிராப்பரிடம் (Shroff) மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.06.24** ஆம் திகதி முதல் ஒவ்வொரு வேலை நாளிலும் 0900 மணி முதல் 1500 மணி வரை **கொள்முதல் பிரிவில்,** மனுக்களுக்கான பிரிவில் மனு ஆவணத் தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். மனு ஆவணங்களை வெளியிடுவதற்கான கடைசி திகதி மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் முதற் பிரதியையும் இணைத்து முன்வைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டுகள் இல்லாமல் முன்வைக்கப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாத மனுக்களாக கருதப்படும்.

4. முத்திரையிடப்பட்ட பிரதிகளுடன் கூடிய மனுக்கள் இறுதித் திகதிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபால் மூலம் **"தலைவர், திணைக்கள வழங்கல் குழு, இலங்கை விமானப்படை"** க்கு அனுப்பிவைத்தல் அல்லது இறுதித்திகதிக்கு முன் இலங்கை **விமானப்படை தலைமை அலுவலகம் (மேற்கு வாயில்), இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே, இலங்கை விமானப்படை நிலையத்தின் பிரதான பாதுகாப்பு அறையில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும். விலைமனுக்கள் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனேயே **LL2 மாடி, இலங்கை விமானப்படை தலைமையகம், இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம், ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டையில்** மனுக்கள் திறக்கும் அறையில் மனுக்கள் திறக்கப்படும்.

5. மனுதாரருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களின் தொழில் வழங்குனரின் அனுமதிக்கடிதத்தை முன்வைப்பதன் மூலம் மனுக்கனை திறக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடையும் நேரத்திற்குப் பிறகு, மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி மனு திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

6. அனைத்து மனுதாரர்களும், மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட மதிப்பு மற்றும் காலஎல்லைக்கான முதல் எழுத்துப்பூர்வ கோரிக்கையின்படி மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற மனு பத்திரம் மூலம் பணப் பரிமாற்றம் செய்யக்கூடிய மனு பிணையினை சமர்ப்பிக்க வேண்டும். மனுப் பாதுகாப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருத்தல் வேண்டும். வங்கி உத்தரவாதத்துடன் **"விமானப்படைத் தளபதி"** க்கு அனுப்பப்பட வேண்டும். மனுப் பாதுகாப்பு உத்தரவாதத்தின் மாதிரி நகல் அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல் - 2006 இல் வெளியிடப்பட்டது.

7. இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு தலைமை கொள்முதல் அதிகாரி **(தொலைபேசி - 011-2347694)** அல்லது **பணியாளர் அதிகாரி வழங்கல் (மனுக்கள்) (தொலைபேசி: 011-2495495, நீட்டிப்பு - 12915, பெக்ஸ் : 011- 2441553)** மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்து மூல விண்ணப்பத்தை முன்வைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

கொள்முதல் பிரிவு,
இலங்கை விமானப்படை தலைமையகம்,
இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர,
கோட்டே.

**விமானப்படை தலைமையகம்,**
**இல.594, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே.**

**விமானப்படை தளபதி**